**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 618/2004**

Deposition of **<u>P.W.-1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 24.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்வக்குமார் Fathers Name : லேட்.கிருஷ்ணன்

துவக்க நேரம் : 12.48P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பொழுது சொத்து விவரத்தில் ஒரு அயிட்ட சொத்துதான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் திருத்தப்பட்ட வழக்குரையில் 3 அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஒரே சர்வே எண்ணில் ஆக்கிரமிப்பு பகுதிகள் தனிதனியாக இருந்ததால் 3 அயிட்டமாக தனிதனியாக காட்டப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட தாவாவில் 3 அயிட்ட சொத்துக்களுக்கு பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதன்பின்னிட்டு 4 முதல் 6 பிரதிவாதிகளுடன் சமாதானமாகியதால் 1-வது அயிட்ட சொத்துக்களுக்கு மட்டும்தான் பரிகாரம் கேட்டுள்ளோம்.

2. திருத்தப்பட்ட வழக்குரையில் தாவா 2, 3 அயிட்ட சொத்துக்களுக்கு மட்டும்தான் விளம்புகை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதபோல் 3-வது பரிகாரமாக 4, 5 பிரதிவாதிகள் 2-ஆம் அயிட்ட சொத்தில் ஆக்கிரமிப்பு செய்த பகுதியை ஒப்படைப்பு செய்யவேண்டும் என்று பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 4-ஆம் பரிகாரமாக 6-ஆம் பிரதிவாதி 3-ஆம் அயிட்ட சொத்தில் ஆக்கிரமிப்பு செய்த பகுதியை ஒப்படைப்பு செய்யவேண்டும் என்று பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. 4, 5, 6 பிரதிவாதிகளுடன் சமரசமாக சென்றதால் அவர்களுக்கு எதிராக வழக்கை திரும்ப பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் மீது குறிப்பாக திருத்தப்பட்ட வழக்குரையில் பரிகாரம் கேட்கப்பட்டுள்ளதா என்றால் கேட்கப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றால் அவ்வாறான குறிப்பான பரிகாரம் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்காததால் நான் கேட்கும் எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் எவ்வளவு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அவர்கள் தாவா சொத்தில் எங்கள் அனுபவத்தை இடையூறு செய்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குரையில் சொத்து விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்பதால் தாவாவில் கேட்கப்படும் பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் எவ்வளவு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்ற விவரங்கள் குறிப்பிடாததால் அவர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.36 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt.L.Kalaiselvi - O.S. No.618/2004, Dt.17.03.2026.